உரிமையாளர்களுடைய, அந்தச் சங்கத்தினுடைய நீண்டகால கோரிக்கையாகவும் அது இருப்பதால், அதனை அவசர, அத்தியாவசிய கோரிக்கையாக அரசு ஏற்று, இதனை ஒரு ஸ்பெஷல் கேசாக ட்ரீட் செய்து, மத்திய அரசை வலியுறுத்தி, விரைவில் இந்தப் புறவழிச்சாலை அமைய அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, அரசு விரைந்து இந்தச் சாலையை அமைக்க எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கும்.

பாளயங்கோட்டையில் தொழிற்பேட்டை அமைத்தல்.

* 5040—திரு. சு. குருநாதன் :

மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பாளையங்கோட்டையில் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

மகளிர் மேம்பாட்டுக் கழகம்.

* 6480—திருமதி பாப்பா உமாநாத் :

திருமதி ரமணி நல்லதம்பி :

மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னையில் செயல்பட்டுவரும் மகளிர் மேம்பாட்டு கழகத்தின் தொழில் துறைகளில் பணிபுரியும் பெண்களின் ஊதியத்தை உயர்த்திட அரசிடம் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திருமதி. பாப்பா உமாநாத் : தலைவர் அவர்களே, சென்னையில் உள்ள அச்சகம், சிவகாசியில் உள்ள அச்சகம் ஆகியவற்றில் பணிபுரிகிற தொழிலாளர்களுக்கு குறைந்த